Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 26 ஆம் நாள் ஷஃபான் பிறை 6 11 12-64) வெள்ளிக்கிழமை இதழ் 302

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றரிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பு

பல்வேறு கட்சித் தலைவர்களும் கொழும்பில் ஆலோசனை

கொழும்பு, வியாழன்

பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுப் பொதுத்தேர்தல் நடைபெறுமென்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அறிவித்த 24 மணிநேரத்துக்குள்ளாக, முக்கிய அரசியல்கட்சித் தலைவர்கள் எல்லோரும் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்கள் இன்று கொழும்பில் ஆலோசனைகள் நடத்தினர்.

அலரி மாளிகையில் சுறுசுறுப்பு

பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் இன்று காலை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் கூடி ஆலோசனை நடத்தினார்கள். எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதமர் தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி குதிக்கவிருப்பது குறித்து இன்று முக்கிய ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

அபேட்சகர்களில் மாறுதலில்லை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து போனவர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் குறித்து இன்று அலரிமாளிகையில் ஆலோசனை நடைபெற்றது. சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட பல பகுதிகளிலும் பலர் முன்வந்துள்ளதாக கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இறுதிவரை இருந்து சேவையாற்றிய எம். பி.க்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்குப் பதிலாக புதிய அபேட்சகர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும் தற்போதுள்ள எம். பி.க்களே மீண்டும் போட்டியிடுவார்கள் என்றும் சுதந்திரக்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வாரத்தில் கண்டியில் நடைபெறும் சுதந்திரக் கட்சியின் 12-வது வருடாந்த மகாநாட்டில் எதிர்வரும் தேர்தல் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சி. பி. டி. சில்வா கோஷ்டியினர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற திரு. சி. பி. டி சில்வா, தமது ஆதரவாளர்களுடன் கொழும்பிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் இன்று பேச்சுக்கள் நடத்தினர், தமது புதிய அரசியல் கட்சியை நிறுவுவது குறித்தும் எந்தெந்த தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றியும் திரு. சி. பி. டி. சில்வா பேச்சுவார்த்தைகள் நடத்தினர். சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற எம். பி.க்களும் ஏராளமான ஆதரவாளர்களும் இன்று காலை திரு. சி. பி. டி. சில்வாவைச் சந்தித்தனர்.

கணவனைக்காப்பாற்ற இராணுவத்துடன்போராடிய மனைவி!

சுழிபுரம், வியாழன்

சரித்திரக் கதாநாயகி சாவித்திரி, தனது கணவன் சத்தியவானை மீட்பதற்கு எமனுடன் போராடியது போன்ற ஒரு தத்ரூபமான காட்சியை சுழிபுர வாசிகள் சிலரால் பார்க்க முடிந்தது. நாடகத்தில் அல்ல நடைமுறையில் தான்! தனது கணவரைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினர் கைது செய்து, பிடித்துக்கொண்டு செல்ல முயற்சித்தபோது திரு. பிச்சையின் மனைவி தனது கணவரைப் பிடித்தார். இராணுவத்தினர் ஒரு கையிலும், மனைவி ஒரு கையிலும் பிடித்து இழுக்கவே திரு. பிச்சை நடுவில் இழுபட்டார். இராணுவத்தினர் பிச்சையின் மனைவியை எவ்வளவு பயமுறுத்தியும் அவர் தனது கணவரின் கையை விட்டுவிடவில்லை. நீண்டநேரமாக திரு பிச்சை இராணுவத்தினரதும் தனது மனைவியினதும் இழுவிசைகளைத் தாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பல மக்கள் அங்கு கூடிவிட்டனர். பல நிமிஷ நேரத்தின் பின்னர் இராணுவத்தினர் திரு. பிச்சையை தமது முகாமுக்குக் கூட்டிச் சென்றனர்.

திரு. பிச்சை பதிவு செய்யப்பட்ட பிரஜை என்றும் அவர் இலங்கையர் ஒருவரை மணம் செய்துள்ளாரெனவும் இராணுவ முகாம் விசாரணையின்போது தெரிய வந்ததால் அவரை இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

இலங்கைக்கு இந்தியா கவலை

புதுடில்லி, டிச. 0

இலங்கையில் வசித்து வரும் "வாசபர்மிட்" வைத்திருப்பவர்களுக்கு விசாவைப் புதுப்பிப்பதில்லை என்ற முடிவு குறித்து இந்தியா தன் கவலையை இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்திருப்பதாய் உதவி வெளிநாட்டு மந்திரி திரு தினேஷ்சிங் கூறினர்.

சுதந்திரக்கட்சி அங்கத்தினர்கள் பேராசிரியர் இரத்தினசாமி திரு. ராம்சிங் ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையிலே இவ்வாறு கூறினர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு இது முரணானது எனவும் அவர் கூறினர்.

கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனர் இந்தியாவின் கவலையை இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்திருப்பதாய் திரு. தினேஷ்சிங் தெரிவித்தார்,

கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இன்று ஆரம்பமாகவிருந்த சீனக்குடியரசின் ஓவிய புத்தக சித்திரக் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவு

பார்லிமெண்ட் கலைக்கப்படுவதால் 6 அங்கத்தவருக்கு வாக்குரிமையிருக்காது

கொழும்பு, வியாழன்

பாராளுமன்றம் டிசம்பர் 17-ந்திகதி கலைக்கப்படவிருப்பதால், சர்வகலாசாலை சபையில் அங்கத்துவம்வகிக்கும் 6 பாராளுமன்ற அங்கத்தவர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைத் தெரிவுசெய்யும் தேர்தலில் டிசம்பரில் வாக்களிக்கமுடியாத நிலையேற்பட்டுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் இந்த 6 அங்கத்தவர்களும் வாக்களிக்கும் உரிமையற்றவர்களாவார்கள்.

திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, பீட்டர் கெனமன், இராசமாணிக்கம், சூரியாராச்சி, மந்திரிகள் மைத்திரிபால சேனநாயக்கா, லு[illegible] டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர் இச்சபையில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

பென்ஷன் பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு இம்மாதம் பென்ஷன் பணம் 21-ந் திகதி முதல் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கை சிவில் பென்ஷன் 21-ந் திகதியும் விதவைகள், அநாதைப் பிள்ளைகள், ஆசிரியர்கள் பென்ஷன் 22-ந் திகதியும், வேனியூர் பென்ஷன் 23-ந் திகதியும் வழங்கப்படும். தபாலகங்களில் இம்மாதம் 21-ந் திகதி பென்ஷன் பெற்றுக்கொள்ளலாம்.

எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டம் நடைபெறாது

கொழும்பு, வியாழன்

சனிக்கிழமை நடைபெறவிருந்த எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தைத் தெரிவுசெய்யும் ஜனநாயக உரிமையை மக்களுக்கு உறுதியளிக்குமுகமாகப் பொதுத்தேர்தலை நடத்தும்படி கோரி டிசம்பர் 12-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு நகரமண்டபத்தில் விரைவில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றை நடத்த எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒழுங்குசெய்திருந்தனர்.

இன்று காலை பார்லிமெண்டில் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள், முன்னர் திட்டமிட்டபடி பொது கூட்டத்தை நடத்துவதில்லையென்று முடிவு செய்துள்ளனர்.

தேர்தலில் முன்னாள் நீதிபதிகள் போட்டி!

யாழ்ப்பாணம், வியாழன்

அடுத்த பொதுத்தேர்தலில் வடமாகாணத்திலுள்ள இரு தொகுதிகளில் முன்னாள் நீதிபதிகள் போட்டியிடவிருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் நீதிபதி ஒருவரும், நல்லூர் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் சார்பில் முன்னாள் நீதிபதி ஒருவரையும் போட்டிக்கு நிறுத்த இரு கட்சி அங்கத்தவர்களும் முயற்சியெடுத்துவருவதாக அறியப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி

பெருமாள் கோவிலில் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி மகோற்சவம் இம்மாதம் 15ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

15ம் திகதி காலையில் சுவர்க்கவாசல் தரிசனையும், இரவு கருடசேவை உற்சவமும், அருட்கவி சீ. விநாசித்தம்பியின் "அலகிலா விளையாட்டுடையார்" என்னும் பொருள்பற்றிய நம திரு வை. நல்லையாவின் 'சஞ்சீவி சபதம்' என்பது பற்றியதுமான கதாப்பிரசங்கங்களும் நடைபெறும். இரா நான்கு ஜாமங்களிலும் விசேஷ பூசைகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன

மணிவாக்கு

நாடோறும் நாம நீரில் முழுகும்போது இறைவனுடைய அருள் வெள்ளத்திலே முழுகித் திளைக்கின்றோமென நினைந்து சிவ தியானத்துடன் முழுகுதல் மனமாசுகளையும் நீக்க வழியாகும்.

-திருவாதிரைமலர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 26 உ (11-12-64)

அடுத்த பொதுத் தேர்தல்

இம்மாதம் 17-ம் திகதி பார்லிமெண்ட் கலைக்கப்படுமென்றும். அடுத்த வருடம் மார்ச்மாதம் 24-ந் திகதி தேர்தல் நடைபெறுமென்றும் பிரதமர் அறிவித்துள்ளார். இதன் மூலம் சர்வாதிகாரவாதிகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இது பாராட்டத்தக்கதாகும்.

ஆசியாவிலும் தென் கிழக்காசியாவிலும் பலநாடுகளில் ஜனநாயக ஆட்சி முறைகள் தோல்வியடைந்து சர்வாதிகாரம் தலைதூக்கிவரும் இச் சமயத்தில் ஜனநாயகச் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப் பட்டிருப்பதானது இங்கு நிர்வாக ரீதியில் சில குறைகளிருப்பினும் ஜனநாயகம் இங்கு நிலைபெற்றுவிடுமென்ற நம்பிக்கையை உறுதிப் படுத்துவதாக இருக்கின்றது.

தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு அபேட்சகரும் தீவிர முயற்சி செய்வர் சூறாவளிப் பிரசாரங்கள் நடைபெறும். இவை நடைபெற வேண்டியவைதான் ஆனால் அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் தங்கள் வெற்றியை விட நாட்டின் அமைதியையும் நலனையும் பேணிக் காக்கவேண்டியது இச் சமயத்தில் மிகமிக அவசியம்.

வருகிற தேர்தலில் மொழி, மதம், இனம், இந்தியர் முதலிய தோஷங்களுக்கு முன் போல் அவ்வளவு இடமிராது மீண்டும் துவேஷ வெறி கிளப்புகிறவர்களுக்கு பொதுமக்களின் ஆதரவு இல்லாது போகும். முன் தேர்தல்களிலே கூட சிங்களப் பொது மக்களும் வகுப்புத் துவேஷ கட்சிகளை ஆதரிக்க மறுத்து விட்டனர் ஆகவே இனிவரும் தேர்தலில், அரசியல், பொருளாதாரக்கொள்கைகள் மீதே மக்களின் தீர்ப்பைப் பெற வேண்டி இருக்கும்.

பொது மக்களிடையே அரசியல் அறிவு வளர்ந்திருக்கின்றது வெறிகளைக் கிளப்பி இனியும் அவர்களை ஏமாற்ற முடியாது நாட்டில் சமூக ஒற்றுமை குலைக்கப்பட்டதற்கும், அதனால் நாட்டின் முன்னேற்றம் தடைபட்டதற்கும் சில அரசியல் வாதிகள் தான் பொறுப்பேற்கவேண்டும் இனி அவ்விதம் நடைபெறாமல் தடுத்தும், சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றப் பாதையில் ஜனநாயக முறையில் நடத்திச் செல்பவர்களுக்குத்தான் மக்களின் ஆதரவு இருக்கும். பலாத்காரகாரியங்களுக்கு இடமளிக்காமல், வருகிற தேர்தலை அமைதியாக வெற்றிகரமாக நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமின்றி எதிர்க்கட்சிகளையும் சேரும்.

ஈஸ்வரன் அளித்த சக்திகளை அவனுக்கே அர்ப்பணிப்போம்

— காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் —

இன்று திருவெம்பாவை ஆரம்பமாகிறது. சைவநன்மக்கள் வாழும் இடங்களிலும் சைவ ஆலயங்களிலும் இன்று தொடக்கம் பத்துநாட்களும் மணிவாசகரின் திருவெம்பாவைப் படிப்பும் பஜனையும், பூஜையும் நடைபெறும் அதிகாலையிலேயே சைவநன்மக்கள் எழுந்து நீராடி இறைவனைத் துதிப்பர். விடியற்காலையில் நல்லகாரியம் செய்வதால் கிடைக்கும் பயனைப்பற்றி காஞ்சி காமகோடிபீடம ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அருளியஉரையை இங்குவெளியிடுகிறோம்.

"விடியற்காலையில் நல்லகாரியத்தைச் செய்தால் அது ஸ்திரமாக இருக்கும். விடியற்காலையில் படிக்கும் விஷயங்கள் ஸ்திரமாகப் பதியும். விடியற்காலையில் கடவுளை வழிபட்டால் நல்லபலன் கிடைக்கும். முன்னோர்கள் கடவுளைத் துதித்து உயச்சாந்தியடைந்த, தெய்வீகப் பாக்களையே நாமும் பாடுவோம். சக்தி ஸைரூபமாக நம் உடலுள் இருக்கும் ஆன்மசக்தி, நம ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைப் பிறப்பிக்கச் செய்கிறது. நம்மிடத்திலுள்ள எல்லா சக்தியும் ஈஸ்வரன் தான் கொடுத்தான். அந்தச் சக்தியை ஈஸ்வரனுக்கேதான் நாம் அர்ப்பணிக்க வேண்டுமென்ற நினைப்போடு வாயினால் அவன் நாமங்களைச் சொல்வது. மனத்தினால் அவன் திருவருளைத் தியானிப்பது, சரீரத்தினால் அவனுக்கு உகந்த பணிவிடைகளைச் செய்வது. இவை போன்ற வழிகளில் வாழ்க்கை நடத்தினால் அதுவும் முக்கியமாக நம் குழந்தைகளுக்கு அவைகளைப் பழக்கப்படுத்தினால் எல்லாவித நன்மைகளும் உண்டாகி, ஆனந்தமான சாந்தமானவாழ்க்கை நமக்கு அமையும். வைகறைத் துயிலெழு அரனை மறவேல். திருமாலுக் கடிமை செய்.

ஸ்ரீமத் வி எஸ். எஸ மணி பாகவதரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஆத்ம சஞ்சிகையான 'அருளமுதம்' கார்த்திகை இதழுக்கு சுவாமிகள இச்செய்தியை அனுப்பியிருக்கிறார். 'அருளமுதம்' கார்த்திகை இதழ் [illegible] திருவுருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்துள்ளது திருவெம்பாவை, திருப்பாவை பாசுரங்களும் 'மார்கழிமாதம் திருவாதிரை நாள் வரப்போகிறதையே!' என்ற பாடலைப் பாடிய கோபால் கிருஷ்ண பாரதியாரைப்பற்றிய கட்டுரையும் சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் மணிபாகவதர் தலைமையில் நடைபெற்ற திருவெம்பாவை பஜனை சம்பந்தப்பட்ட படங்களும் அருளமுதத்தை அழகு செய்கின்றன

நீர்வேலி கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி நீர்வேலி கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 23-ந் திகதி ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

திருவெம்பாவைப் பஜனை

யாழ்ப்பாணம் வெள்ளி நல்லூர் பஜனைச் சபையினர் இன்று வெள்ளிக்கிழமை முதல் 34 நாட்களுக்கு தினமும் அதிகாலை 4 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் தேவஸ்தான வீதியிலிருந்து திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை பாடல்கள் பாடிக்கொண்டு நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தின் அண்மையிலுள்ள ஒவ்வோர் ஆலயங்களுக்கும் செல்வர்.

மேற்படி சபையினரின் மற்றொரு பிரிவினர் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அதிகாலையிலிருந்து திருவெம்பாவைப் பஜனை வீதிகள் தோறும் நிகழ்த்துவர்.

முதலாளி வர்க்கத்தின் சதியேகாரணம்

அரசாங்க வீழ்ச்சிக்கு கொல்வின் விளக்கம்

கொழும்பு. [illegible]

'முதலாளி வர்க்கத்தினரின் சதியால் தான் அரசாங்கம் தோல்வியுற்றது' என டாக்டர் கொல்வின் ஆர். டி'சில்வா நேற்று காலிபேஸ் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

முதலில் 'லேக்கவுஸ்' பத்திரிகைகளையும் பின்னர் 'டைம்ஸ்' தவசா ஆகிய பத்திரிகைகளையும் சுவீகரிப்பதற்கான இயக்கத்தை நாம் இப்போது ஆரம்பிக்கக்கூடியதாக விருக்கிறது.

எதிர்க்கட்சியினர் தாம் உத்தேசித்த வேலைநிறுத்தத்தைக் கைவிட்டதற்குக் காரணம் அவ்விதம் வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்பவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற அச்சமே.

தாம் ஒரு புனித சுதந்திரக் கட்சியைத் தோற்றுவிக்க விரும்பியதாக திரு சி. பி டி. சில்வா தெரிவித்துள்ளார். ஆனால் திரு சில்வா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியதால சுதந்திரக்கட்சி புனிதமடைந்துள்ளது என நான் கூற விரும்புறேன்.

சிறிலங்கா தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் திரு ஹரோல்ட ஜெயவர்த்தன பேசுகையில், திரு. சி. பி டி. சில்வாவின் துரோகம் நாட்டிலுள்ள கீழ் நிலையிலுள்ள தொழிலாளர்களுக்குச் செய்த துரோகமாகும் என்றார்.

சிவாலய புனருத்தாரணவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி உருத்திரபுரம் சிவாலய புனருத்தாரண சபையின் 10-வது ஆண்டு விழா ஞாயிற்றுக்கிழமைமாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. ஆர். செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

காணி, நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ம. ஸ்ரீ காந்தா உட்பட பல அறிஞர்கள் விழாவில் சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள்.

திருவெம்பாவை நிகழ்ச்சிகள்

மேல்கரவை சிததொண்டர் கழகத்தினர் இன்று தொடக்கம் திருவெம்பாவையை முன்னிட்டு வீதிவலப் பஜனை நடத்த தீர்மானித்துள்ளனர்.

நெல்லியடியில்

திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் விசேஷ பிரார்த்தனைகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடத்த நெல்லை அறநெறிக்கழகம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுள்ளது.

மானிப்பாயில்

இன்று மாலை 5 மணிக்கு மானிப்பாயில் வேலக்கை பிள்ளையார் கோவில் முன்றலில் கந்தரோடை சன்மார்க்க தவகூடத்தின் ஆதரவில் திருவெம்பாவையையொட்டி 'செம்மனச்செல்வியின் பக்தி' பற்றி கதாப்பிரசங்கம் நடைபெறும்.

ஹவானா, டிச 6

தாம் பதவியிலிருந்து விலக்கப்பட்டதற்காக கியூபா தொழில் மந்திரி தம்மைத் தாமே துப்பாக்கியால் சுட்டுக்கொள்ள முயன்றதாய் அறிவிக்கப்படுகிறது

முதியோர் கல்விக்கு வசதிசெய்ய தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி நயினாதீவு சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

நிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு.வே.குலசேகரம். செயலாளர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, பொருளாளர் பண்டிதர் க. குகதாசன பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது

முதியோர் கல்விக்கான வசதிகளைப் பெற்று அதற்கான வகுப்பு நடத்துவதெனவும் புத்தக வாரம் ஒன்றைக் கொண்டாடி அதன் மூலம் புத்தகங்களைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கண்டனம்

கொழும்பு, வியாழன் தொழிற்சங்கங்களை கட்சி அரசியலில் ஈடுபடுத்தும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் காரியக்கமிட்டியின் செய்கைக்கு, கமிட்டியின் சில அங்கத்தவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

(5-ம் கலத்தொடர்ச்சி)

இவர்? இப்போது தீ மிதியல் நடக்கக் காரணமென்ன! ஸ்ரீமா அரசாங்கம தோற்றதற்காகவா? அந்த முருகன் இப்போது யாருடைய கட்சியோ?

* * *

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே புலர்ந்தது பூங்கழற்கிணை துணை மலர் கொண்டு, ஏற்றி நின் திருமுகத்தெமக்கருள் மலரும் எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம், சேற்றிதழ் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந்துறையுறை சிவ பெருமானே, ஏற்றுயர் கொடி உடையாய் எனை உடையாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

- ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்.

ஐயாறன் எழுதுவது

கொழும்பு காலிபேஸ் கடற்கரையில் சென்ற புதன்கிழமையன்று நடந்த பொதுக் கூட்டம், முன்னர் 1939-ம் ஆண்டில் நேருஜி அங்கு பேசிய பெரிய கூட்டத்தை நினைவுபடுத்துவதாக இருந்ததாம் கொழும்பிலிருந்து வந்த ஓர் அன்பர் இப்படித் தெரிவிக்கின்றார்.

ஏரிக்கரை 'டெயிலி நியூஸ்' பத்திரிகை கூட, ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும், காம்பெல் பார்க்கிலிருந்து காலிபேஸுக்கு ஊர்வலமாகச் சென்றதாகக் கூறுகிறது. ஊர்வலப்படத்தை சின்னதாகப் போட்டுள்ளனர். இக்கூட்டத்தின் பெரிய படம் போடவில்லை ஒருவேளை இன்று வெளியிடக் கூடும்.

இக்கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமா பேசுவதாக அறிவிக்கப்படவில்லையாம். கூட்டம் பெரிதாக இருப்பதையும் மக்கள உற்சாகம் காட்டியதையும் கண்டே அவர் இக்கூட்டத்தில் தோன்றிப் பேசினாராம். அக்கூட்டத்தைப் பார்க்கையில் ஸ்ரீமாவுக்கு பொதுமக்களிடையே உள்ள ஆதரவையும் செல்வாக்கையும் அலட்சியம் செய்துவிட முடியாதென்றும், அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீமாவே வெற்றிபெற்றாலும் பெறக்கூடுமென்றும் அந்த அன்பர் கருத்துத் தெரிவித்தார்

* * *

எதிர்க்கட்சியினர் இதைவிடப் பெரிய கூட்டம் போட ஏற்பாடு செய்யலாம். தங்களான கொழும்பிலே ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்வாக்கு அதிகமுண்டு. மாநகரசபைத் தேர்தலில் அக்கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி இதற்கு அத்தாட்சி

இக்கூட்டங்களைக் கொண்டு எந்தக்கட்சி வெற்றிபெறும் என்று நிச்சயமாகக்கூற முடியாது தான் என்றாலும் ஸ்ரீமாவுக்கு மீண்டும் ஒரு சான்ஸ் கிடைக்காதென்று யார் நிச்சயமாகக் கூறமுடியும்.

தம் கணவனுர் காலமானதும் அவரது அத்தனகல்லைத் தொகுதியிலேயே இடைத்தேர்தலில் போட்டியிட ஸ்ரீமா முதலில் முன் வந்தார் ஆனால் பிறகு பார்லிமெண்ட் சபையே கலைக்கப்பட்டதால் அந்த இடைத்தேர்தல் நடைபெறவில்லை. பிறகு நடந்த பொதுத் தேர்தலில் எக்காரணம் பற்றியோ அவர் போட்டியிடவில்லை. செனேட் சபைக்கு நியமிக்கப்பட்டு, பிரதமராகவுமானார்.

பிரதமர், ஜனப்பிரதிநிதிகள் சபையிலில்லாமல், செனேட்டில் அங்கம் வகித்தது ஒரு பெரிய குறை. ஸ்ரீமா ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகித்திருந்தால், இந்தத் தோல்வியும் ஏற்படாமல் அவர் தடுத்திருப்பதும் சாத்தியம்.

அது எப்படியாயினும் அந்தப்பெரிய குறைக்கு இடம் வைக்காமல் பிரதமர் ஸ்ரீமா பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளது நல்லது. தன் கணவனுரின் தொகுதியான அத்தனகல்லையிலேயே அவர் போட்டியிடலாமென்று தெரிகிறது. எதிர்க்கட்சிகள் அவருக்குப் போட்டியாக வேறொருபெண்ணை நிறுத்தக்கூடும் இம்முறை தேர்தல் அதிக ருசியாக இருக்கும்.

* * *

கொழும்பு செட்டியார் தெரு பழைய கதிரேசன் கோவிலுக்கு முன்பாக இதுவரை என்றுமில்லாதபடி தீ மிதியல் நடந்ததாயும், அதற்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒலிவெரியாவும் ஒருவரென்றும் ஒரு கொழும்புப் பத்திரிகையில் பார்த்தேன். பண்டாரநாயகா கொலைவழக்கில் விடுதலையடைந்த ஒலிவெரியா தானு

(4-ம் கலம் பார்க்க)

வடவியட்னாம் கிராமத்தை அமெரிக்க கப்பல்கள் தாக்கின!

சைகோன், டிச. 10

மத்திய வியட்னாமில் நடைபெற்ற 8 நாள் சண்டையில் வியட்காங் கொரில்லாக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாம் அறிவிக்கப்படுகிறது. அரசாங்கத் துருப்புகள் ஒரு பன்னர்தாக்கிலுள்ள வியட்காங்கியரை சுற்றி வளைத்துக் கொள்ள இடபோது முயன்று வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

நேற்றைய சண்டையில் இருதரப்பிலும் பல நூற்றுக் கணக்கானோர் பலியாகியதாக அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் வடவியட்னாம் கரையோரக் கிராமம் ஒன்றை 3 அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்து தாக்கியதாயும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இக்கப்பல்கள் வடவியட்னாம் பிராந்தியத்துக்குள் நுழைந்து தாக்கியதாயும் அந்நாடு சர்வதேச கண்காணிப்புக் கமிஷனுக்கு புகார் செய்திருக்கிறது.

ரூ. 275 கோடி ராணுவச்செலவை ரஷ்யா குறைக்க முடிவு

அமெரிக்காவும் பின்பற்றும்

மாஸ்கோ, டிச. 10

அடுத்த ஆண்டு ரஷ்யா தனது ராணுவ பட்ஜட்டில் 275 கோடி ரூபாயைக் குறைத்துக் கொள்ளும் என பிரதம மந்திரி கோஸிஜின் அறிவித்தார். இந்தக் குறைப்பு பற்றி அமெரிக்காவுக்கு அறிவிக்கப்பட்டதெனவும் 1965 66-ம் ஆண்டு தனது ராணுவ பட்ஜட்டில் இதேபோன்று குறைக்கப்படும் என அமெரிக்கா தமக்குத் தெரிவித்திருப்பதாயும் கோஸிஜின் கூறினார்.

ஆயுதப் போட்டியை நிறுத்துவதை ரஷ்யா ஆதரித்து நிற்கிறது என்றும் சோவியத பிரதமர் கூறினார்.

கனடாவில் வில்சன்

ஒட்டாவா, டிச. 10

ஒட்டாவா வந்து சேர்ந்த பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் கனடா பிரதமர் திரு லெஸ்டர்பியர்ஸனுடன் நேட்டோ அணு ஆயுதக் கொள்கை பற்றி விவாதித்தார். தாம் ஜனாதிபதி ஜோன்ஸனுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றிகரமாய் இருந்தது என்றும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் கயானாவுக்கு கூட்டு அரசாங்கம்

எதிர்க்கட்சித் தலைவர் மந்திரிசபை அமைக்க விருப்பம்

ஜார்ஜ்டவுன், டிச. 10

பிரிட்டிஷ் கயானாவில் ஒரு கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றி பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் செட்டி ஜகனின் மக்கள் முன்னேற்றக் கட்சி 24 ஸ்தானங்களையும், எதிர்க்கட்சித் தலைவர் திரு பேர்ன்ஹாமின் மக்கள் தேசிய காங்கிரஸ் 22 ஸ்தானங்களையும் சட்டசபையில் கைப்பற்றியிருக்கின்றன.

ஆனால் திரு. பேர்ன்ஹாம் மந்திரிசபை அமைக்கும் பொறுப்பு தமக்கு விடப்படவேண்டும் என்றும், மற்றோர் அரசியல் கட்சியுடன் மந்திரிசபை நிறுவத்தாம விரும்புவதாயும் கூறியிருக்கிறார்.

இந்தோனேஷியர் கரையிறங்கினர்

கோலாலம்பூர் டிச,10

மலேசியாவின் மேற்கு கடலோரத்தில் கரையிறங்க முயன்ற 7 இந்தோனேஷியர்கள் பிடிபட்டனர் என்றும், மற்றோர் இந்தோனேஷியர் கோஷ்டி தேடப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நாசவேலை சதியில் ஈடுபட்டதாக 8 பெண்கள் உட்பட 37 பேர் ஜாகர்த்தாவில் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாயும் இந்தோனேஷிய அறிக்கை ஒன்று கூறுகிறது.

பாதுகாப்புசபையில் காங்கோ விவாதம்

நியுயோர்க், டிச. 10

காங்கோபற்றி ஐ. நா. பாதுகாப்புச்சபை விவாதிக்க ஆரம்பித்திருக்கிறது. சபைமுன் இரு புகார்கள் இருக்கின்றன. அமெரிக்க—பெல்ஜியத் தலையீடு காரணமாக காங்கோவில் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்பட்டிருப்பதாக 21 நாடுகள் தாக்கல்செய்திருக்கும் புகார் ஒன்று. தமது நாட்டின் உள் விவகாரங்களில் சில ஆபிரிக்க நாடுகளும், சீனாவும், ரஷ்யாவும் தலையிட்டு வருவதாக காங்கோ பிரதமர் ஷோம்பேயின் குற்றச்சாட்டு மற்றொன்று.

ஷோம்பேயின் புகாரை நிகழ்ச்சிநிரலிலிருந்து அகற்ற ரஷ்யா மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றது.

அரசாங்கதுருப்புகள் முன்னேற்றம்

ஸ்டான்லிவில், டிச. 10

காங்கோவில் அரசாங்கத் துருப்புகள் தொடர்ந்து முன்னேறிவருவதாயும், மேலும் 60 ஐரோப்பியர்களை அவர்கள் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து விடுதலை செய்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

ஸ்டான்லிவில் நகரம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இத்தலியில்

ஷோம்பே விரோத ஆர்ப்பாட்டம்

ரோமாபுரி, டிச. 10

இத்தாலியில் ஷோம்பேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திரு. ஷோம்பே போப்பாண்டவரைத் தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. கைகலப்புக் காரணமாக பலர் கைதுசெய்யப்பட்டனர்.

மாணவர் கிளர்ச்சி தொடருகிறது

ராவல்பிண்டி, டிச. 10

பாகிஸ்தான் பூராவும் மாணவர்கள் கிளர்ச்சியும், நெருக்கடியும் தொடர்ந்து நீடித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ரயில் விபத்தில் 24 பேர் பலி

புதுடில்லி, டிச. 10

உத்தரபிரதேசத்தில் வடகிழக்கு ரயில்வேயில் கோரக்பூர் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் ரயில் ஒன்று பஸ் ஒன்றுடன் மோதியதால் 24 பேர் கொல்லப்பட்டனர். 72 பேர் காயமடைந்தனர். என்ஜின் தடம்புரண்டது. மாண்டவர்கள் அனைவரும் பஸ்பிரயாணிகள் என்றும், பஸ் முற்றாகநொருங்கிவிட்டதெனவும் அறிவிக்கப்பட்டது.

புதிய சென்னை ஷெரீப்

சென்னை, டிச. 10

1964-65-ம் ஆண்டுக்கு சென்னை நகரின் புதிய ஷெரீப்பாக "சென்னை இந்திய சிமிந்தி ஸ்தாபன" டைரக்டர் திரு. டி. எஸ். நாராயணசாமி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

'சியாங்சீனவை வெளியேற்றக்கூடாது'

டோக்கியோ டிச 10

ஐ. நா. விலிருந்து கோமின்டாங் சீன அரசாங்கத்தை வெளியேற்றும் எந்த முயற்சியையும் ஜப்பான் ஆதரிக்காது என்று ஜப்பானிய வெளிநாட்டு மந்திரி கூறினார்.

பிரிட்டனில்

கென்னடி நிதிக்கு ரூ. 8 லட்சம்

லண்டன், டிச. 10

ரூ 133 லட்சம் திரட்டுவதென்ற கென்னடி நினைவு நிதிக்கு இதுவரை பிரிட்டனில் ரூ 8 லட்சத்து 18 ஆயிரம் சேர்ந்துள்ளது.

யு. எஸ். நூலகம் மூடப்பட்டது

ஜாகர்த்தா, டிச. 10

ஆர்ப்பாட்டம் ஏற்பட்டதை அடுத்து, சுரபாயாவிலுள்ள அமெரிக்க நூல்நிலையத்தை இந்தோனேஷியா மூடியிருக்கிறது.

காஷ்மீர்

பாகிஸ்தான் திருப்திக்கேற்ப. . .

ராவல்பிண்டி, டிச. 10

காஷ்மீர் பிரச்னை காஷ்மீர் மக்களின் திருப்திக்கேற்ற முறையிலும், பாகிஸ்தானின் திருப்திக்கேற்ற முறையிலும் தீர்க்கப்படவேண்டும் என பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் துருக்கி பாராளுமன்றத் தூது கோஷ்டித்தலைவர் கூறினார்.

மக்களுக்கே நாடு சொந்தம்

கராச்சி, டிச. 10

மக்களுக்கே நாடு சொந்தம் என்றும், நாட்டுக்கு அவர்களே எஜமானர்களென்றும் பாகிஸ்தான் அதிபர் பதவிக்குப் போட்டியிடும் பாதிமா ஜின்னா இங்கு கூறினார்.

"சீன—ரஷ்ய

கருத்து வேறுபாடுகள் குறையவில்லை"

நியுயோர்க், டிச. 9

சீன-ரஷ்ய கருத்து வேறுபாடுகள் குறையவோ அல்லது தீர்க்கப்படவோ இல்லை என்று இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் இங்கு டெலிவிஷன் பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நேசத்தை பாகிஸ்தான் இழந்தது

அயூப்பின் திறமையின்மையே காரணம் என்கிறார் பாதிமா

கராச்சி, டிச. 10

அயூப்கான் திறமையின்மை காரணமாக, பாகிஸ்தான் தனது ஒரே நண்பனான அமெரிக்காவை இழந்துவிட்டது. என மிஸ் பாதிமா ஜின்னா கூறினார்.

"அமெரிக்கா இப்போது இந்தியாவுடன் சேர்ந்துகொண்டு அதற்கு ஏராளமான உதவியளித்துவருகிறது, பாகிஸ்தானுக்கு நண்பர்கள் யாரும் இல்லை எனினும் வெளிநாட்டில் இந்நாட்டின் அந்தஸ்து உயர்ந்துவிட்டது எனச் சொல்லிக்கொள்கிறார்கள்" என்றும் பாதிமா ஜின்னா கூறினார்.

"அயூப்கான் பழைய அரசியல்வாதிகள்மீது குற்றம் சொல்லுகிறார். அதிபரையும் அவருடைய சகாக்களையும்விட அவர்கள் ஆயிரம்மடங்கு உயர்ந்தவர்கள். ஏனெனில் அவர்கள் சொந்தத்துக்குப் பணம் குவித்துக்கொள்ளவில்லை. சுதந்திரத்துக்குப்பின் அயூப்கான் ஒரு சாதாரணமான குற்றத்திற்காக ராணுவத்திலிருந்து நீக்கப்படவிருந்தார். ஆனால் யாரோ ஒருவர் கேட்டுக்கொண்டதன் பேரில் எனது சகோதரர் ஜின்னா கருணைகாட்டி அவரை கிழக்கு பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்தார்.

அதிபர் தேர்தலில் தோற்றால் அயூப்கான் பதவியை ராஜினாமா செய்யமாட்டார் என்று ரகசியமாக நடக்கும் பிரசாரத்திற்கு மக்கள் செவிசாய்க்கவேண்டாம். தேர்தல் குழு மெம்பர்களையும், தொழில் அதிபர்களையும் மிரட்டுவதற்காக இந்தப் பிரசாரம் நடக்கிறது.

அயூப்கான் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் நாட்டில் அரசியல்ஸ்திரத்தன்மை இருக்காது என்கிறார்கள். அரசியல் ஸ்திரத்தன்மை ஒரே ஒரு நபரைமட்டும் பொறுத்ததல்ல. நான் பதவிக்கு வந்தால் தேசம் நாசமாகிவிடும் என்கிறார்கள். நான் செல்லும் இடங்களிலெல்லாம் ஏராளமான ஜனங்கள் வந்து என் பிரசங்கங்களைக் கேட்டு என்னை ஆதரிப்பதாக உறுதியளிக்கிறார்கள். என்னைத் தேர்ந்தெடுப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் அவர்களுக்குத்தெரியாதா? அறிவு பூராவும் ஒரே ஒரு மனிதனிடம்தான் திரண்டிருக்கிறதா?

ஆளும் கட்சியினருக்கு மக்களிடம ஆதரவில்லை. கட்டிடங்களுக்குள் அவர்கள் கூட்டம் நடத்துகிறார்கள். 200 பேருக்குமேல் கூட்டம் சேருவதில்லை. ஆனால் பத்திரிகைகள் இக் கூட்டம்பற்றி பெரிய தலைப்புக்களுடன் விபரமாகப் பிரசுரிக்கின்றன.

அரசியல் தலைவர்களை ஒதுக்கிவைத்து, மக்களுக்கு வாய்ப்பூட்டுப்போட்டு, தேர்தல் நடாத்தி இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பதவியில் நீடிக்கலாம என்று ஆளும் கட்சி நினைக்கிறது. ஆனால் கடவுள் சித்தம் வேறாக இருக்கிறது. ஐந்து கட்சிகள் சேர்ந்து என்னை அபேட்சகராக நிறுத்தியிருக்கின்றன. மக்கள் ஏற்கனவே எனக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

தேசத்தின் தலைவிதி தேர்தல் குழுவினரின் கையில் இருக்கிறது என்னிடம்பணம் இருந்தாலும் நான் பணம் கொடுத்து ஓட்டுவாங்கமாட்டேன்" என்றும் மிஸ் ஜின்னா கூறினார்.

போப்பாண்டவர் விஜயம் இந்தியாவுக்கு வெற்றி

அமெரிக்க பத்திரிகைகள் கருத்து

நியுயோர்க், டிச. 10

எதிர்காலத்தில் இந்திய அரசாங்கம் கோடிக்கணக்கில் செலவிட்டாலும் போப்பாண்டவர் விஜயத்தில் ஏற்பட்டதைப் போன்ற மதசார்பற்ற இந்தியத் தோற்றத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்தியிருக்க முடியாது என்றும் போப் விஜயம் ராஜதந்திரத் துறையில் இந்தியாவுக்கு வெற்றி என்றும் அமெரிக்க பத்திரிகைத் தகவல்கள் கருத்து தெரிவித்துள்ளன.

மாபெரும் கூட்டங்களும் மக்கள் வறுமையும் பெரிய ஜனத்தொகையும் போப்பாண்டவரிடம் நிலையான விளைவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாய் அத்தகவல்கள் கூறின.

கருத்தடை பற்றி தன் போக்கை ஏற்கனவே திருச்சபை மறு பரிசீலனை செய்துகொண்டிருப்பதாயும் நவீன தேவைக்கிணங்க தன் கொள்கையைப் பொத்துவதை போப்பாண்டவரின் இந்திய விஜயம் துரிதப்படுத்தக்கூடும் என்றும் தகவல் கூறின.

இந்தியாவிலுள்ள எல்லா மதத்தினரும் போப்பாண்டவரை வரவேற்றதை எல்லா பத்திரிகைத் தகவல்களும் வலியுறுத்தின. அவரை வரவேற்ற லட்சக்கணக்கான மக்களில் கிறிஸ்தவர்கள் சிறுபிரிவினர்தான் என்றும் அவை கூறின.

சகிப்புத்தன்மை, மற்ற மதங்கள் தலைவர்களிடம ஹிந்து மதத்தின் மதிப்பு ஆகிய மரபு காரணமாக இவ்வாறு காணப்பட்டதாகவும் தகவல்கள் கூறின.

போப் விஜயம் போர்த்துக்கலுக்கும், இந்தியாவிடம் அது வஞ்சம் தீர்ப்பதற்கும் சூட்டாக விளங்கியது என எல்லாத் தகவல்களும் வலியுறுத்தின.

குரோமிகோ

வாஷிங்டன், டிச 10

ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு குரோமிகோ ஜனாதிபதி ஜோன்ஸனையும் வெளிநாட்டு மந்திரி ரஸ்கையும் சந்தித்துப் பேசினார்.

தென்வியட்னாமில் ஊடுருவல் செய்வதை நிறுத்துமாறு வடவியட்னாம் மீது தமது செல்வாக்கை பிரயோகிக்கும்படி ரஷ்யாவை அமெரிக்க அதிகாரிகள் கேட்டுக்கொண்டதாயும் ஆனால் இவ்விஷயத்தில் இரு நாடுகளுக்குமிடையே பாரதூரமான கருத்துவேற்றுமை நிலவுவதாயும் அறிவிக்கப்பட்டது.

முதன் மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, டிச 10

எல்லையில் பயமுறுத்தல்கள் ஏற்பட்டுள்ள சமயத்தில் பிரிவினைமனோபாவத்தையும்; சமூகத்துக்கு விரோதமான சக்திகளையும் அடக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதுபற்றி இம்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் நடைபெறும் ராஜ்ய முதன் மந்திரிகள் மகாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கிறது. உள்துறை மந்திரி திரு. நந்தா கூட்டும் இந்தமகாநாடு விலைவாசி நிலவரம்பற்றியும் விவாதிக்கும்.

புலோப்பளை கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, புதன்

புலோப்பளை கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மஜிஸ்திரேட் திரு. ரோபர்ட் சில்வா எதிரிகள் எழுவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு இன்று காலை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிகளின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு ஈ. பி. சத்துருக்குலசிங்கம் தனது தொகுப்புரையை நிகழ்த்தினர். அப்போது அவர் இவ்வழக்கின் முக்கிய சாட்சியான கொலையுண்டவரின் மகள் புஷ்பராணி (12) யின் சாட்சியத்திலும் வாக்குமூலத்திலும் பல முரண்பாடுகள் இருப்பதாகக் கூறி அவற்றை எடுத்து விளக்கி, இவற்றை நம்பி தண்டனையளிக்க முடியாது என்றும் மற்றவர்களின் சாட்சியங்களும் அப்படியே என்று கூறினர். நீதிபதி அவற்றை ஏற்றுக்கொண்டு எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் இந்த வருடம் செப்டம்பர் மாதம் 12ம் திகதி புலோப்பளையில் ஆறுமுகம் ஏகபவரை வெட்டிக் கொலை செய்ததாக பி. எட்வேட், ஆர். அலோயஸ், எஸ். சீமான்பிள்ளை, எஸ். சுபேக, பி மனுவேற்பிள்ளை, ஜே. அல்பிரட் ஆகிய எழுவர்மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் திருவாளர்கள் என். நடராசா, எஸ். பாலகிருஷ்ணன், வி. கனகசபை ஆகியோரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு ஈ. பி. சத்துருக்குலசிங்கம் ஆஜரானர். பளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ரொட்றிகோ வழக்கை நடத்தினர்.

ஷேக்ஸ்பியர் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

ஷேக்ஸ்பியரினால் எழுதப்பட்ட புத்தகங்களின் கண்காட்சியொன்று இன்று தொடக்கம் 12-ம் திகதிவரை யாழ்ப்பாணம் நூல்நிலையக் கட்டடத்தில் நடைபெறும். தினமும் காலை 9 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை இக்கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடலாம். யாழ். மேயர் திரு. எஸ். சி. மகாதேவா இந்தப் புத்தகக்கண்காட்சியை இன்றுகாலை 9 மணிக்குத் திறந்து வைப்பார். பிரிட்டிஷ் கவுன்சில் ஆதரவுடன் இந்தக் காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருவாதிரை உற்சவம்

காரைநகர், வெள்ளி

ஈழத்து சிதம்பரம் என வழங்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் திருவாதிரை உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. அடுத்த சனிக்கிழமை இரதோற்சவமும் அன்றிரவு 2 மணி தொடக்கம் நடராஜப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் நடைபெறும். அடுத்த ஞாயிற்றுக் கிழமை சூரிய உதயத்தில் ஆருத்திரா தரிசனமும் அன்று மாலை திருவூடலும் நடைபெறும். அன்று அன்னதானமும் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

ரேடியோவில் தெ. இ. மொழிபோதனை

புதுடில்லி, டிச. 10

ஹிந்தி பேசும் மக்களுக்காக ரேடியோவில் தென்னிந்திய மொழிகள் போதிக்கப்பட வேண்டும் என்று பார்லிமெண்ட் தகவல் ஒலிபரப்பு ஆலோசனைக் கமிட்டியில் கூறப்பட்ட யோசனையை ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி வரவேற்றார்.

'அதிகநேரம் ஒதுக்குக'

கொழும்பு, வியாழன்

வில்வத்தை ரயில் விபத்து கமிஷன் முன் சாட்சியமளிக்கப் போவதாக அகில இலங்கை பிரயாணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. பெருந்தொகையானோர் சங்க சார்பில் சாட்சியமளிக்கவிருப்பதால் கூடிய நாட்களை ஒதுக்குமாறு சங்கத்தினர் கமிஷனைக் கேட்டுள்ளார்.

'பிள்ளைகளை நல் நிலைப்படுத்துவது பெற்றோரது கடமை'

வட்டுக்கோட்டை எம். பி. பேச்சு

சுழிபுரம், வியாழன்

'பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்தால் மட்டும் போதாது பிள்ளைகள் தங்கள் அறிவை வளர்ப்பதற்கு வேண்டிய ஊக்கத்தையும் கொடுக்க வேண்டும்'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் பண்ணாகம் வடக்கு காலையடி அமெரிக்க மிஷன் பாடசாலை பெற்றோர் தின விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில்; பெற்றோர்கள் பாடசாலை ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் வாழ்வு, கல்வி அறிவு ஆகியவற்றை நல்நிலைப்படுத்த வேண்டும் என்றார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், நல்ல கட்டுப்பாடான சமுதாயமாக வாழ நல்லநெறிகளைக் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பழம்பெரும் இலக்கியங்கள் காட்டும் இலட்சியம் ஒழுக்கம்தான் என்றும் கூறினர்.

வட்டார வித்தியாதரிசி திரு எஸ். சபாபதி பேசுகையில் பாடசாலைகளின் தேவைகளை என்பதை சுட்டிக் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ள பெற்றோர், ஆசிரியர் ஆகியோர் தயங்கக் கூடாது என்றார்.

திரு சி. கந்தையா பாடசாலைகளின் சேவையை எடுத்துக் கூறினர். பாடசாலை மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சி இறுதியில் இடம் பெற்றது.

நிசங்காவுக்கு புதிய பதவி

கொழும்பு, புதன்

கலாசாரவிவகார டைரக்டராக திரு. நிசங்கா விஜயரத்தின நியமிக்கப்பட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக சமயத்தில் திரு. விஜயரத்தின யாழ்ப்பாணத்தில் பதில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றினர். பின்னர் காட்புறதிக் கூட்டுஸ்தாபனத்தில் மனேஜராக நியமிக்கப்பட்டார்

மைலோ அவர்களை ஆரோக்கிய சாலிகள் ஆக்கும்

துரித சக்தி—அதைத் தான் நீங்கள் மைலோவிலிருந்து பெறுகின்றீர்கள். ஒவ்வொருவரும் இதன் சொக்கலேட் போன்ற மோல்ற் சுவையை விரும்புகிறார்கள். அத்துடன் மைலோவில் அடங்கியுள்ள விசேஷ விட்டமின்கள் உங்கள் தேகாரோக்கியத்தைப் பாதுகாக்கின்றது. உங்கள் குடும்பத்தினர் சக்தியுடன் துள்ளு நடை போடச் செய்யுங்கள். அவர்களுக்கு மைலோவை ஒவ்வொரு நாளும் பரிமாறுங்கள்.

NESTLÉ
MILO
TONIC FOOD DRINK

விசேஷமான விட்டமின்கள் நிறைந்தது

வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 11-12-64

கொழும்பு

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 சமய பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம் — வி. குமாரசாமி

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு — பூமணி ராஜரத்தினம், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 பேச்சு — நாமும் நாடும், 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 பக்தி பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 [illegible], 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தர மாணவர்களுக்கு.

மாலை 5-5 நாதஸ்வரம் — கே. எம். கிருஷ்ணமூர்த்தி

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திகள், 6-20 கிராம நிகழ்ச்சி, 7-30 பொங்கியெழும் பாரதச் சித்திரம், 7-45 புல்லாங்குழல் — பல்லடம் [illegible], 9-15 சுப்பிரமணிய பாரதியாரின் குயில் பாட்டு — இசை நிகழ்ச்சி, 10-00 திரைப்பட இசை

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 489
சிவாஜி—மாதுரிதேவி
நடித்த
மனிதனும் மிருகமும்

திருக்கேதீச்சரத்தில் சிரமதானம்

கொழும்பு, வியாழன்

சென்ற ஆண்டு போன்று இந்த வருடமும் கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் திருக்கேதீச்சரத்தில் சிரமதானம் மூலம் கோவிலில் முக்கிய பணிகளை இம்மாதம் 18-ந் திகதி தொடக்கம் 27-ந் திகதி வரை செய்வார்கள். சிரமதான இயக்கத்தில் பங்கு பற்றும் தொண்டர்களுக்கு தங்குவதற்கு இடவசதியும் உணவு வசதியும் திருக்கேதீச்சர திருப்பணிச்சபையால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. பிரயாணச் செலவை மட்டும் தொண்டர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த சிரமதானத்தில் பங்கு பற்றுவதற்காக பதுளை, அட்டன், நாவலப்பிட்டி, கம்பளை, மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, மாத்தளை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்து தொண்டர்கள் திருக்கேதீச்சரம் போய்ச் சேர்வார்கள் என எதிர்பார்ப்பதாக இ. வா. சங்கக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

---

60 லட்சம் மிச்சமாகும்

கொழும்பு, வியாழன்

1965-ம் ஆண்டுக்கென ஆஸ்திரேலியாவுடன் செய்யப்பட்ட மாவு ஒப்பந்தத்தினால் வெளிநாட்டு செலவாணியில் 60 லட்சம் ரூபா மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் உணவுக் கமிஷனர் திரு பிரசில்வா ஆஸ்திரேலியாவுக்குச் சென்று இந்த ஒப்பந்தத்தைச் செய்ய ஏற்பாடுகள் செய்திருந்தார். அடுத்த வருடத்தில் 50,000 - 150,000 தொன் மாவை வாங்குவதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

REGAL - JAFFNA
NOW SHOWING
BOB HOPE
ANITA ERBERG
IN
PARIS HOLIDAY
(Technirama - Technicolor)

காடைத்தனத்தை அனுமதியாதீர்

ஐ. ஜி. பி. வேண்டுகோள்

கொழும்பு வியாழன்

"காடைத்தனங்கள், அவை எவ்வளவு சிறிதாக இருப்பினும் அவை உருவாவதில் இருந்து மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் நிலைக்கு வருமுன்னர் அவற்றைப் போக்கிவிட வேண்டும். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட எவ்வித அச்சமும் கொள்ளாதீர்கள்" என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திசநாயக்கா மாகாணங்கள், பெரும்பிரிவுகள் ஆகியவற்றின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

"மகாசங்கத்துக்கு மரியாதையும், மதிப்பும் கொடுத்து வந்த எமது நாட்டில், அவர்களுக்கு இன்னலும் இடையூறும் விளைவிக்கத்தக்க முறையில் சட்டத்தின் பாதுகாவலர்களாகிய நாங்கள் நடந்து கொள்ளக் கூடாது. நடந்த வாரம் நடைபெற்ற காடைத்தனம் பற்றி நான் மிகவும் கவலையடைகின்றேன்.

நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் அவர் எந்த இனத்தவராயினும், எந்த மதத்தவராயினும், எந்தக் கட்சியினராயினும் நாட்டுப் பாதுகாப்புச் சட்டவிதிகளைக் கைக்கொண்டு பாதுகாப்பு அளிக்க வேண்டியதே பொலிசாரின் கடமையாகும்" எனவும் திரு. திசநாயக்கா தமது சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனேஜர் தேவை

தகமைகள்:

1. வயது 21 — 35
2. கல்வி சிரேஷ்டதராதரம் (S S C)
3. பிணை ரொக்கம் 1000/-
   " ஆதனம் 2000/-
4. ஒழுக்கச்சான்றிதழ் -
   (அ) காரியாதிகாரி
   (ஆ) கி. ச. தலைவர்
   (இ) சமாதான நீதவான் அல்லது கடைசியாக சித்தியடைந்த தலைமையாசிரியர்.
5. சம்பளம் $\frac{100 - 150}{5 \times 10}$
6. 6 மாதம்வரை தற்காலிகமாக கடமையாற்றவேண்டும்.
7. கூட்டுறவுப் பயிற்சியில் சித்தியடைந்தவர்கள் கனிஷ்ட தராதரத்துடன் விண்ணப்பிக்கலாம்.
8. கூட்டுறவுப் பயிற்சி உள்ளோருக்கும் கணிதம் ஆங்கிலம், தமிழ் எழுத்து விசேட சலுகை உண்டு.
9. விண்ணப்பங்கள் கடித உறையின் இடதுமேல் மூலையில் மனேஜர் விண்ணப்பமெனக் குறித்து 21-12-64 க்கு முன் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

ச. க. கடம்பையா,
கௌரவ காரியதரிசி
யோகபுரம் மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
துணுக்காய் 8-12-64

குறிப்பு:-விண்ணப்பத்துடன் தராதரப்பத்திரத்தின் பிரதி மாத்திரம் அனுப்புக. 1221

'கல்வித்திட்டம் மாற்றப்படுவதால் மாணவர் கஷ்டமடைகிறார்கள்'

உடுப்பிட்டி, வியாழன்

"அரசாங்கம் எவ்வித கஷ்டமுமில்லாமல் தன் இஷ்டப்படி அடிக்கடி கல்வித் திட்டங்களை மாற்றிக் கொண்டிருக்கிறது. அதனால் கஷ்டப்படுபவர்கள் மாணவர்களே. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் சேர்ந்து படிக்கும் ஆற்றலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் அதற்கான திறமை பெற்றிருந்தும் கல்விச் சட்டப்படி குறிப்பிட்ட பாடங்களில் விசேஷ சித்திகளை எடுக்காத காரணத்தால் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். இச்சட்டம் கல்வியில் ஊக்கமும் திறமையும் மிகுந்த மாணவர்களை மிகவும் பாதித்து வருகிறது. உயர்தர விஞ்ஞான தத்துவங்களும், சொற்களும் செயல்முறைகளும் ஆங்கிலத்திலேதான் எழுதப்பட்டுள்ளன. அவற்றைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு ஆங்கிலம் அவசியமாதலால் கல்லூரிகளில் ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களை ஆங்கிலக் கல்வியில் ஊக்கப்படுத்த வேண்டும்"

இவ்வாறு அகில இலங்கை மாணவர் சங்க வடமராட்சிக் கிளைக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு மா. சிவஞானசுந்தரன் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், "ஜி. சி. ஈ. (சாதாரணம்), ஜி. சி. ஈ (உயர்தர) வகுப்புகளுக்குப் பாடமெடுக்கும் எந்த ஒரு ஆசிரியரும் அவ்வகுப்புக்குரிய பாடத்திட்டத்தை முழுவதும் படிப்பித்து முடிக்காமல் எக்காரணத்தைக் கொண்டும் இடமாற்றஞ் செய்யப்படக்கூடாது" என்று கூறினார்.

திருவாளர்கள்: சு இராசேந்திரன், கே. பாலசிங்கம், நா முருகேசன் ஆகியோரும் பேசினர். அடுத்த ஆண்டில் இப்பகுதி மாணவர்களை விளையாட்டுக்களில் ஊக்கப்படுத்துவதுடன் சிரமதான இயக்கமூலம் கிராமப்புறங்களில் பாழடைந்தபொது கிணறுகளையும் சீரழிந்த வீதிகளையும் திருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. கி. சிவஞானம் நன்றி கூறினார்.

இப்பொழுது
திரையிடப்படுகிறது
ராஜா சினிமா (சுழிபுரம்)
சாந்தாராம், சந்தியா
முதலியோர் நடித்த
ஸ்திரீ
(ஹிந்தி)

'நல்ல வீதிகள் அவசியம்'

கொழும்பு, வியாழன்

'ஒரு நாட்டின் முன்னேற்றம் வீதிகளில்தான் முக்கியமாகத் தங்கியிருக்கிறது. பாவனையாளர்களின் தேவைகளைத் தீர்க்கவும் கல்வி, சுகாதாரம் போன்ற சமூகத்தேவைகளை பூர்த்தி செய்யவும் நல்ல வீதிகளிருப்பது அவசியம்' என பொதுமராமத்து மந்திரி திரு சப்னி குணவர்த்தன இலங்கை வீதி பரிபாலன சம்மேளனத்துக்கு அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கணக்கியல் பயில லண்டன் செல்வார்

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறை, தையிட்டியைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை தர்மராசா லண்டனிலுள்ள பாலிகம் அன்ட் பூடிங் கல்லூரியில் சேர்ந்து மதிப்பீட்டு கணக்கியல் துறையில் கல்வி பயில்வதற்காக இம்மாதம் 15-ம் திகதி லண்டனுக்குப் பயணமாவார். இவர் குறிப்பிட்ட கல்லூரியில் நாலு ஆண்டுகள் கல்வி பயில்வார். இளைப்பாறிய ஓவசியர் திரு கணபதிப்பிள்ளையின் மகனான இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

ஸ்தலஸ்தாபன தேர்தல்கள்

கொழும்பு, வியாழன்

சுமார் 150 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முன்னர் குறிப்பிடப்பட்டபடி அடுத்த வருடம் ஜனவரி மாத இறுதியில் நடைபெறுமென ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு ஈ. எப். டயஸ் அபயசிங்கா தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

உயர்ந்த ரகங்கள்-கண்கவர் டிசைன்களில் டக்கா, பிளெயின் இன்னும் பல நிறங்களில் கைத்தறிச் சேலைகள் விற்கப்படும். நெசவு நூல் நிலையம், 32, கொழும்புத்துறை ரோட், கண்டிக்குளி. 1182

காணவில்லை

9-12-64 இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உடுப்பிட்டிக்கு சென்ற பஸ் கோப்பாயில் தீப்பிடித்து எரிந்த பொழுது ஒரு பாக் (Bag) மஞ்சிறம் காணமல் போய்விட்டது. தயவு செய்து அதை எடுத்தவர்கள் அதற்குள் இருக்கும் கடிதங்களையாவது தபால் மூலம் அல்லது நேரிலாவது தந்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ரத்தினம் அம்பிகா இல 8 ஜும்மா மோஸ்க் லேன், யாழ்ப்பாணம். 1307

வீடு வாடகைக்கு

இந்து மகளிர் கல்லூரிக்கருகில் ஆறு அறைகள் கராஜ், மின்வெளிச்சம், குழாய்த் தண்ணீர் முதலிய வசதிகளுடன். விபரங்களுக்கு 38 கல்லூரி வீதி, நீராவியடி. 1305

காணி விற்பனை

கே. கே. எஸ். வீதி, தலையாளி ஒழுங்கையில் வீட்டிற்குரிய அத்திவாரத்துடன் கிணறும் பிரயோசனமுள்ள 5 பரப்பு $2\frac{7}{8}$ குழி காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு ஜெகசோதி மாணிக்கம் 16, ஹமீதா அப்துல் ஹமீத் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 1306

வீட்டுப் பிளான்

வீடுகள் கட்டுவதற்கு (பிளான்) படம் குறைந்த செலவில் அமைத்துக் கொடுப்பதற்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். ஜெயநாதன், 4, கஸ்டம்ஸ் ஒழுங்கை, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1166

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6-45 மணி முதல் 8 மணி வரை நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கச் சமயப்பிரசார சபையினரால் ஸ்ரீமத் வி. எல். எஸ். மணிபாகவதர் தலைமையில் திரு வே. கந்தையா "மனிதப் பிறவியின் அலட்சியஞ் செய்யப்பட்ட சில இலட்சியங்கள்" என்னும் பொருள் பற்றியும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை திரு. சி. தம்பிஐயா "விரதங்களின் மகத்துவம்" என்னும் பொருள் பற்றியும், நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "மாணிக்கவாசகர்" என்னும் பொருள் பற்றியும் நல்லூர் கிழக்கு முத்தவிநாயகர் ஆலயத்தில் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை திரு க. சுப்பிரமணியம் "மணமகனாகு மகாதேவன்" என்னும் பொருள் பற்றியும், திங்கட்கிழமை மாலை 6-30 மணி முதல் நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் ஸ்ரீமத் மணிபாகவதர் "கால்மாறு ஆடிய காரணம்" என்னும் பொருள் பற்றிப் பக்கவாத்தியங்களுடன் சங்கீதகதாப்பிரசங்கமும் நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

2-வது மகத்தான வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா ([illegible])
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பக்தியை மூட்டி,
தெய்வத்தின்
நிலை அடைந்து
தமிழர் உள்ளத்தில்
வாழும் - பட்டினத்தார்
பிரபல
பின்னணி பாடகர்
டி. எம்.
சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

தேர்தல் முஸ்தீபு

நாளை தமிழ் காங்கிரஸ் நிர்வாகசபை கூடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொது நிர்வாக சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் கூடுகிறது. இக் கூட்டத்தில் தற்பொழுதுள்ள அரசியல் நிலைபற்றியும், எதிர்வரும் பொதுத் தேர்தல் பற்றியும் ஆராயப்படுமென அறியப்படுகிறது. இக் கூட்டத்திற்கு தமிழ் காங்கிரஸ் நிர்வாகசபை அங்கத்தவர்கள் எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு, பல முக்கிய விஷயங்கள் ஆராயப் படுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது ஐந்து கூட்டங்கள் நடத்துவதென்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக தமிழ் காங்கிரஸ் இணைக்காரியதரிசி திரு. ரி. சங்கரப்பிள்ளை கூறினார்.

ஒவ்வொரு தொகுதிகளிலும் கூட்டங்களை ஒழுங்கு செய்யும் பொறுப்பு, தமிழ் காங்கிரஸ் பொதுக்காரிய சமிட்டியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும், முதலாவது கூட்டத்தை ஜனவரி முதல் வாரத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப் படடு வருவதாகவும் தெரிவித்தார்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற வாலிபமுன்னணிக் கூட்டத்தில் பொதுத் தேர்தலுக்கு செய்யப்படவேண்டிய ஆயத்தங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டது. இம்மாத இறுதியில் மீண்டும் வாலிபமுன்னணி யாழ்ப்பாணத்தில் கூடவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸின் முதலாவது பிரசாரக்கூட்டம் யாழ்ப்பாணத்திலும், இரண்டாவது கூட்டம் உடுப்பிட்டியிலும், மூன்றாவது கூட்டம் கோப்பாயிலும், இதைத் தொடர்ந்து மற்றும் பிரசாரக் கூட்டங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் நடைபெறுமென்றும் தெரிய வருகிறது.

ஆயுர்வேத மாணவருக்கு விடுதி

கொழும்பு, வியாழன்

ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியில் பயின்றுவரும் 300 மாணவருக்கு இப்போது விடுதி வசதியளிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன இலாகாவினால் உபயோகிக்கப்பட்டுவந்த கட்டடமே மாணவர் விடுதியாக் கப்பட்டுள்ளது

தேர்தல்முஸ்தீபு

தென்னிலங்கை தமிழர்கள் யாரை ஆதரிக்க வேண்டும்?

தமிழரசுக்கட்சி ஆலோசனை

நல்லூர், வெள்ளி

தென் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் வாக்காளர் எந்த கட்சிக்கு தமது வாக்குகளை அளிக்கவேண்டும் என்பது பற்றி தமிழரசுக்கட்சி விரைவில் முடிவு செய்து அறிவிக்குமென தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையிலுள்ள தமிழ் வாக்காளரின் நிலையை தீர்மானிக்குமுன் தமிழர் நிலை பற்றி சிங்களக் கட்சிகளின் கருத்தினை தமிழரசுக்கட்சி அறியுமெனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்னைகளை நியாயமான முறையில் தீர்த்து வைக்க முன்வரும் சிங்கள அரசியல் கட்சிக்கு வாக்களிக்கும்படி தமிழரசுக்கட்சி தென் இலங்கை வாக்காளர்களைக் கேட்டுக்கொள்ளுமெனவும் திரு. செல்வநாயகம் கூறினார்.

தமிழரசுக்கட்சியின் செயற்குழு இம்மாதம் பத்தொன்பது, இருபது திகதிகளில் கொழும்பில் கூடுகிறது.

பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கட்சி அபேட்சகர்கள் போட்டியிடுவது பற்றி இச்செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும்.

ஒவ்வொரு தொகுதிகளிலும் இம்மாத முடிவிற்குள் கிளைகளை அமைக்கும் முயற்சிகள் வலுவடைந்துள்ளன. கிளைகளை வலுப்படுத்துவதில் கட்சி எம். பிக்கள் அனைவரும் தீவிரமாக ஈடுபடவேண்டும் எனக் கட்சித் தலைமைபீடம் கேட்டுக்கொண்டுள்ளது

சைகோன், டிச 9

தென் வியட்நாமில் நடைபெற்ற கடும் சண்டைகளில் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. ஓரிடத்தில் 160 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாய் மேலும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கா தன் பாதுகாப்புசெலவை குறையாது

வாஷிங்டன், டிச 10

அமெரிக்காவின் ராணுவச் செலவைக் குறைப்பது பற்றி ரஷ்யாவுடன் எவ்வித உடன்பாடும் மேற்கொள்ளப்படவில்லை எனராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ரஷ்யா தனது ராணுவ பட்ஜட்டில் 60 கோடி ரூபிள்களை குறைக்க விருப்பதாகவும், அதற்கேற்ப அமெரிக்காவும் தனது பட்ஜட்டைக் குறைக்க இயங்கி இருப்பதாகவும் சோவியத் பிரதமர் திரு. கோஸின் மாஸ்கோவில் கூறியிருந்தார்.

இதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்க அறிக்கை வெளியாகியது.

அமெரிக்காவின் பாதுகாப்புத் தேவைக்கேற்பவே, அதன் பாதுகாப்புச் செலவு அமைந்திருக்கும் என ராஜாங்க இலாகா அதிகாரி தெரிவித்தார்.

அமெரிக்கா வருடம் ஒன்றுக்கு 25,000 கோடி ரூபாய் பாதுகாப்புக்குச் செலவிடுகிறது.

'அரவணைப்பது கடமை'

காஞ்சிபுரம், டிச. 10

'அன்று வறுமையினால் பாரதம் வாடிவதங்கியபோது கூலிகளாக இலங்கையர்களுக்கு குவிக்கப்பட்ட நமது சகோதரர்களை, இன்று வறுமையில்லை, வளம்பெற்றிருக்கிறோம் வாருங்கள்" என்று அழைத்து அரவணைக்க வேண்டியது தான் நமது கடமை' என இங்கு நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் திரு ஜெபமணி பேசுகையில் கூறினார்.

எம். பி. யின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

பருமழை இல்லாமையாலும் தொடர்ந்து வரட்சி நிலவியதாலும் வவுனியாப் பகுதியில் விவசாயத்தை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்றும் இவர்கள் அன்றாட உணவைப் பெறமுடியாத நிலையிலிருக்கிறார்களென்றும் இவர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் விவசாயக் கமிட்டிகள் ஆகியவற்றில் இவர்களுக்கு ஏற்ற வேலைகளை வழங்குமாறு வவுனியா எம். பி. திரு டி. சிவசிதம்பரம் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, பொதுமராமத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, சமூக, கலாசார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு புத்தக அன்பளிப்பு

கொழும்பு, வியாழன்

செக்கோசிலவாக்கியாவின் தூதரக அதிகாரி திரு. ஜ. செவ்சிமா, பல்கலைக்கழக உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலையிடம் பல்கலைக்கழகத்துக்கென நூறுக்கும் மேற்பட்ட ஆங்கில விஞ்ஞான நூல்களை அன்பளிப்புச் செய்தார். செகோசிலவாக்கிய விஞ்ஞானிகள் பலர் எழுதி, செகோசிலவாக்கியவிஞ்ஞான அக்கடாமி மூலம் வெளியிடப்பட்டஇந்த நூல்களில் பொறியியல், வைத்தியம், பௌதீகம், இரசாயனம் போன்ற பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த புத்தகங்களும் அடங்கியுள்ளன.

மீண்டும் பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த மாதம் வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட தராதர பரீட்சையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலை மாணவர்களுக்கு சரித்திரம், இந்து சமயம் ஆகிய பாடங்களில் அவர்கள் படிக்காத பகுதிகளிலிருந்து கேள்விகள் வழங்கப்பட்டதைத்தொடர்ந்து மீண்டும் அம்மாணவர்களுக்கு நேற்றுக்காலை சரித்திர, இந்து சமய பரீட்சைகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடிசன்மார்க்க போதனா ஆங்கிலபாடசாலையைச்சேர்ந்த 18 மாணவர்களுக்கு வடமாகாண ஆசிரிய சங்கத்தால் நடத்தப்பட்ட பரீட்சையில் அவர்களுக்கு படிப்பிக்காத பகுதியிலிருந்து கேள்விகள் கொடுக்கப்பட்டது. இவ்விஷயம் ஆசிரிய சங்கத்திற்கு கொண்டுவரப்பட்டதின் பயனாக அம்மாணவர்களுக்கு மீண்டும் சரித்திர, இந்து சமயபரீட்சை நேற்றுக்காலை பெருமாள் கோவிலடி சன்மார்க்கபோதனா ஆங்கில பாடசாலையில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்த இரு பரீட்சைகளுக்கும் 18 மாணவர்களில் 15 மாணவர்கள்மட்டுமே வந்திருந்தார்கள். விடுதலைக்காக கொழும்பு போன்ற தூர இடங்களுக்கு சென்ற மாணவர்கள், இப்பரீட்சைகள் எழுதுவதற்கு மீண்டும் யாழ்ப்பாணம் வந்துபோகவேண்டிய நிலைமை யேற்பட்டது.

வருடாந்த விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி, கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த ஐக்கிய விருந்து அண்மையில் நடைபெற்றது. வைபவத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர்.

செய்திச் சுருக்கம்

"தமிழ்மக்களுக்கு முக்கிய கட்டம்"

தமிழ்பேசும் மக்கள் தமது அரசியல் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் இலட்சியத்தில் தனித்துநின்று போராடுவதில், முக்கியமான சாதனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் சமீபகால இலங்கையின் அரசியல் வாழ்வு தமிழ் பேசும் இனம் தனது தனித்துவ அரசியற் போராட்டத்தில் வைத்துள்ள நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளதென்றும் வாழைச்சேனை, கொடுவாமடு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய கல்குடா எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

⁂

மகளைக் கொலை முயன்றவருக்கு 7 வருடச் சிறை

தனது சொந்த மகளான மேரி திரேசாவைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக புத்தளத்தைச் சேர்ந்த ஆர். ஏ. பீட் அப்புஹாமி (56 வயது)க்கு நீர்கொழும்பு அசைஸ் கமிஷனர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி ஏழுவருடக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தார்.

⁂

'அழகிய மனைவிகளால் ஆபத்து'

அழகிய மனைவி ஆபத்தானவள் என்ற பழமொழியைப் பெண்கள் நடைமுறைக்குக் கொண்டு வருகிறார்களென்றும் ஆண்கள் எப்போதும் அழகிய பெண்களுக்காக ஆசைப்படாமல் குணவதியான பெண்களையே தெரிந்தெடுக்க வேண்டுமென்று பதுளையில் நடைபெற்ற தற்கொலை சம்பந்தமாக செங்கெட்டிய மரண விசாரணை அதிகாரி எச்சரித்தார்.

தனது இளம்மனைவி மாற்றான் ஒருவனுடன் ஓடியதால் விரக்தியுற்ற ஒருவர் விஷமருந்தி தற்கொலை செய்யப்பட்ட சம்பவமொன்றின் விசாரணை முடிவில்தான் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

⁂

வி. பி. டி.க்கு மைத்திரியின் கண்டனம்

முதலாளித்துவ நலன்களைப் பேணுவதில்தான் திரு வி பி டி சில்வாவின் முழுக்கவனமும் இருக்கிறதென்றும் அவர் கட்சியை விட்டு விலகிச் சென்றதால் தனக்குத்தானே அவமானத்தைத் தேடிக்கொண்டதேயன்றி கட்சிக்கு எதுவிதமான இழுக்கும் ஏற்படவில்லையென்றும் அநுராதபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா குறிப்பிட்டார்.

⁂

'அரசாங்கத்தின் ஊதுகுழல்'

இலங்கை வானொலி அரசாங்கத்தின் ஊதுகுழலாகி இருக்கிறதென்றும் மக்களைத் தங்கள் வழிக்கு இழுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் வானொலியில் பொய்களை கிரமமாக ஒலிபரப்பி வருகிறதென்றும் கொடுகாமையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய [illegible] எம். பி திரு வீ பி ஜே. செனவிரத்ன சொன்னார்.

வேல்முருகன் வைத்தியசாலை

முறிவு, நெரிவு சிகிச்சைநிலையம் (29-ம் திகதி) 14-12 64 திங்கட்கிழமை புதிதாகத்திறக்கப்படும்

அ. வேலுப்பிள்ளை, சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.
பதிவு எண்: 4779. 1308

சுன்னாகம் தமிழ்விழா

இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் இன்று மாலை தமிழ்விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன வருகிற ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவிருக்கும் இவ்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் கணேசையா அரங்கில் திரு ச. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும்.

உருத்திரபூபதி கோஷ்டியினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகும் இன்றைய விழாவில் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம், திரு ம. சி. சதாசிவம், வித்துவான் க. கந்தசாமி, திரு. சோ. இளமுருகனார், வித்துவான் பொன் முத்துக்குமாரன் ஆகியோர் சொற்பொழிவாளர்களாகக் கலந்துகொள்கிறார்கள்.

கவிஞர் கா. அம்பிகைபாகனின் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் கவிஞர்கள் சா. வே. பஞ்சாட்சரம், நா. ஆறுமுகம், இ. நாகராஜன், அ. துரைசிங்கம், வே. சண்முகலிங்கம் ஆகியோர் இன்று பங்குபற்றுகிறார்கள். இன்றைய விழாவில் மற்றும் பல இசைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

'தொழிலாளருக்குத் துரோகம்'

பஸ் தொழிலாளர் கூட்டத்தில் பேச்சு

நல்லூர், வெள்ளி

டாக்டர் என். எம். பெரேராவும், திரு. பீட்டர் கெனமனும் பஸ் தொழிலாளர்களையும் மற்றைய தொழிலாளர்களையும் ஏணிகளாகப் பாவித்துப் பெரும் பதவிகளையடைய முயற்சிக்கின்றார்கள் என்று இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் உதவிக் காரியதரிசி திரு நாமிக்க குணதாசா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பஸ் தொழிலாளர்களின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திலேயே திரு. குணதாசா மேற்கண்டவாறு கூறினார்: இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போ பிரிவு தலைவர் திரு. எம். கதிர்வேலு தலைமைவகித்தார்.

திரு குணதாசா தொடர்ந்து பேசியதாவது:-

1963ம் வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பஸ் தொழிலாளர்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற வேலைநிறுத்தத்தின் போது தொழிலாளர்களை ஏணியாகப் பாவிக்கும் உத்தி கையாளப்பட்டது, தொழிலாளர்களின் தலைவர்களாகக் கூறப்படுபவர்களும், திரு. அனில்முனசிங்காவும் வேலைநிறுத்தத்தின் முதல் ஐந்து நாட்களும் ஆதரவளித்தனர். ஆனால் அதன்பின் முதலாளிகளின் சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்காகத் துரோகமிழைத்துவிட்டனர். தொழிலாளர்களின் 21 அம்சக் கோரிக்கைகள் சம்பந்தமாக அவர்கள் செய்துள்ள துரோகத்தினால் இது மேலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் தமது நலனைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கும் முதலாளிவர்க்கத்திற்கும் எதிராக ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்."

மக்கள் சீனக் குடியரசின் சித்திர, தீபக் கண்காட்சி

டிசம்பர் 11, 12, 13ல் யாழ் நகரமண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளது. இக்கண்காட்சி டிசம்பர் 26, 27, 28ல் யாழ். நகரமண்டபத்தில் நடைபெறும். 1310

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 196 -ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.